(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

06.12.2019 STC. 384/2018 PW1 Name:Santhakumar

***எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி.,***

*வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் எதிரி என்னிடம் பணம் பரிவர்த்தணை செய்துகொண்டிருந்தார் என்ற விவரத்தை கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன விவரத்தை எந்த தேதி முதல் எந்த தேதிவரை எதிரி என்னிடம் பணப்பரிவர்த்தனை செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன பணபரிவர்த்தனைக்குரிய கணக்கு புத்தகங்கள் என்னிடம் உள்ளதென்றால் இல்லை. சிறு தொகைகள் வாங்கியதால் கணக்கு புத்தகங்கள் இல்லை. மத்திய அரசு கொண்டு வந்த பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பின்னிட்டு பெரிய தொகையை வங்கியிலிருந்து ரொக்கமாக எடுக்க முடியாது என்றால் அதைப்பற்றி தெரியாது. நான்கூட்டுறவு சங்கத்தில் பணி புரிவதால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பண மதிப்பிழப்பிற்கு பின்னிட்டு நான் கூட்டுறவு சங்த்திலிருந்து கடன் வழங்கும் திட்டத்தை நிறுத்திவைத்துள்ளேன் என்றால் சங்கத்தின் பதிவேடுகளை பார்த்துதான் சொல்ல இயலும். 2017—2018—க்குரிய வருமான வரியை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கணக்கு விவரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் எஸ்பிஐ வங்கியில் கடன் வாங்கி எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் கணக்கின் விவரப்பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் கேட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ஸ்டேட் பாங்க் இல் அந்த சமயத்தில் வைப்பு தொகை இருந்தது ஏ்ன்பதை காட்ட பாஸ்புக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி தொகை எவ்வாறு*

கிடைத்தது என்றால் வீடு கட்டுவதற்காக கடன் வாங்கிய பணமாகும். எந்த வங்கியில் கடன் வாங்கினேன் என்றால் எஸ்பிஐ வங்கியில் வாங்கினேன். மேற்படி கடனில் நான் வீடு கட்டினேனா என்றால் இல்லை. நான் என்னுடைய வங்கி கணக்கிலிருந்து எதிரியின் வங்கி கணக்கிற்கு ஏன் பணப்பரிவர்த்தனை செய்யவில்லை என்றால் எதிரி ரொக்கமாக கேட்டதால் அவருக்கு ரொக்கமாக கொடுத்தேன். நான் கடன் வாங்கிய பணத்தை எதிரிக்கு ரொக்கமாக கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எஸ்பிஐ வங்கியில் கடன் வாங்கியதை என்னுடைய கணக்கில் காட்டப்பட்டுள்ளதா என்றால் எனக்கும் என்மனைவிக்கு கூட்டு வரவுக்கணக்கு உள்ளது அதனால் இருவரும் சேர்ந்து கடன்வாங்கியுள்ளோம். இவ்வழக்கில் நான் என் மனைவியை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் தேவை இல்லை. என்னுடைய மனைவியை விசாரித்தால் உண்மை புலப்படும் என்றால் அவரை விசாரிக்க தேவையில்லை. மேற்சொன்ன கடன் தொகையை எதிரிக்கு கொடுத்த விவரம் என் மனைவிக்கு தெரியும் என்றால் சரிதான். மனைவியை சாட்சியாக விசாரிக்க மறுப்பதற்கு காரணம் என்னவென்றால் எனக்கு உடன்பாடில்லை. நான் எதிரியின் மீது இந்த காசோலை வழக்கிற்கு பின்னிட்டு 6 மாதம் கழித்து ஈரோடு முதன்மை நீதிமன்றத்தில் ஒரு உரிமையயில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எதிரிக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்த விவரத்தை அந்த பிராதில் சொல்லவில்லை என்றால் தேவைப்படாததால் சொல்லப்படவில்லை. எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகைக்கு ரூ.60,000/- ரூபாயை முன்வட்டியாக பெற்ற விவரத்தை உரிமையியல் வழக்கு பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் மேற்படி வட்டியானது எந்த மாதத்திலிருந்து எந்த மாதத்திற்கான வட்டி என்றால் 02.12.2017 முதல் 02.04.2018 வரை ஆகும். 02.04.2018 தேதிக்கு பின்னிட்டு எத்தனை

நாளுக்கு பின்னிட்டு இந்த வழக்கு காசோலையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுமார் 1 மாதம் கழித்து தாக்கல் செய்துள்ளேன். அந்த இடைப்பட்ட காலத்தில் எனக்கும் எதிரிக்கும் தொடர்பு இருந்ததா என்றால் எதிரி என்னை ஒருமாதம் கழித்து காசோலையை தாக்கல் செய்யுமாறுகூறினார். அறிவிப்பிலும் புகாரிலும் எதிரி காசோலை கொடுத்த தேதிக்கு பின்னிட்டு நாங்கள் இருவரும் சந்தித்து கொண்ட விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி என்னை சந்தித்து காசோலையை ஒருமாதம் கழித்து தாக்கல் செய்யுமாறு சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இன்றைக்கு என்னுடைய உறவினர் ஜெகதீசன் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் இல்லை. சீனாபுரம் தோட்டத்துவலசை சேர்ந்த ஜெகதீசன் என்பவரை தெரியுமா என்றால் என் மாமனாருக்கு உறவினர் ஆவார். அவரும் எதிரிக்கு எதிராக காசோலை வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் இல்லை. வழக்கு காசோலையை யார் நிறைவேற்றி கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையெழுத்தை தவிர காசோலையில் உள்ள விவரங்கள் யார் எழுதினார்கள் என்று தெரியாது. மேற்சொன்ன விவரத்தை நான் எனது அறிவிப்பிலோ புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி நடத்திவரும் கல்லூரியில் என்னுடைய தாயார் கருப்பாயம்மாள் என்னுடைய மாமனார் சின்னசாமி ஆகியோர் டிரஸ்டியாக செயல்பட்டு வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன கல்லூரி எந்த ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது என்றால் 2010 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. கல்லூரியின் ஆரம்ப நிலையில் எதிரி எனது ஏற்பாட்டின்படி வெளி நபர்களிடம் கடன் பெற்றுள்ளார் என்றால் இல்லை. மேற்சொன்ன கடனுக்காக பூர்த்தி செய்யப்படாத காசோலைகளை எதிரி கொடுத்துவைத்திருந்தார் என்றால் இல்லை. மேற்சொன்ன காசோலைகளில்

எல்லாம் கடனை தீர்த்த பின்னிட்டும் என்னிடம் இருந்த நம்பிக்கையின் அடிப்படையில் அந்த காசோலைகளை பெறாமல் இருந்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன கல்லூரிக்கு என்னுடைய தாயார் மாமனார் ஆகியோர் கல்லூரிக்காக எவ்வளவு தொகையை முதலீடு செய்துள்ளார்கள் என்றால் தலா ரூ.30,00,000/– முதலீடு செய்துள்ளார்கள். தற்போது கல்லூரி மற்றும் கல்லூரிக்கு ஈடு கொடுக்க இருந்த சொத்துக்கள் எல்லாம் ஏல நடவடிக்கையில் உள்ளதென்றால் முழுமையாக தெரியாது. மேற்படி ஏல நடவடிக்கை பற்றி என்னுடைய தாயார் ஏதேனும் கூறியுள்ளாரா என்றால் 2019 ஆம் வருடம் ஜீலை மாதம் கூறினார். எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் என்னுடயை தாயார் மற்றும் சகோதரர் ஆகியோரை சாட்சியாக விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை ஆனால் நான் சாட்சியாக அவர்களை விசாரிக்கவில்லை. என்னிடம் ஏற்கனவே எதிரியால் கொடுக்கப்பட்ட வெற்று காசோலைகளையும் கல்லூரிக்காக என்னுடைய தாயார் மற்றும் மாமனார் கொடுத்த தொகை இழந்ததற்காக வசூல் செய்வதற்காக நானும் இதர நான்கு நபர்களும் சேர்ந்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.